
## திராவிடத்தால் வாழ்கிறோம்

**803**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## வைக்கம் நோக்கி, திராவிட நடை!



இளம் தலைமுறைக்கு எளிய வகையில், திராவிட இயக்க வரலாற்றை விதைக்கும் பணிகளை திராவிடப் பள்ளி முன்னெடுத்து வருகிறது. அதில் ஒருபகுதியாக, ‘திராவிட நடை’ என்னும் பெயரில், வரலாற்று நிகழ்வுகள் நடைபெற்ற இடங்களுக்கு, திராவிடப் பள்ளி மாணவர்களை நேரில் அழைத்துச் சென்று, அங்கு நடந்த நிகழ்வுகள் பற்றி கள ஆய்வின் வழியாக எடுத்துக்கூறி வருகிறது.

தற்போது, தந்தை பெரியாரின் பங்களிப்புடன் வெற்றிபெற்ற ‘வைக்கம் போராட்டம்’ நடைபெற்ற பகுதிகளுக்கு திராவிடப் பள்ளி மாணவர்களை நேரில் அழைத்துச் சென்றனர். அந்தப் பயணத்தில் பங்கேற்ற திருப்பூர் மகிழவன் தனது அனுபவம் குறித்து, சமூக வலைத்தளப் பக்கத்தில் எழுதியுள்ளார். அந்தப் பதிவு:

“வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியாரின் பங்கையும்– தமிழரின் பங்கையும் அன்றைய நாளிதழ்கள் மற்றும் கேரள ஆவணக் காப்பகத்தின் ஆவணங்களின் வழியே திரட்டி, அந்த இடங்களுக்கெல்லாம் நேரில் சென்று, ‘வைக்கம் போராட்டம்’ எனும் நூலைத் தந்த எழுத்தாளர் பழ.அதியமான் அவர்கள், எங்களுடன் இந்தப் பயணத்தில் பங்கேற்றார்.

பெரியார் வந்து இறங்கிய, ‘படகு இல்லம்’ தொடங்கி, ‘வைக்கம் நினைவு அருங்காட்சியகம்’, ‘வைக்கம் போராட்டம் நடந்த வீதிகள்’, ‘பெரியார் சிறை வைக்கப்பட்டிருந்த காவல் நிலையங்கள்’, போராட்டத்திற்கு ஓயாது உணவு வழங்கிய நாராயண குரு அறக்கட்டளைக்குச் சொந்தமான அன்றைய மடமாக இருந்த பள்ளிக்கூடம் என ஒவ்வொரு இடத்திற்கும் அழைத்துச் சென்று அந்த இடங்களின் பின்னணியையும், போராட்டத்தில் கலந்துகொண்ட பலரது வாழ்க்கைச் சுருக்கத்தையும் பழ.அதியமான் வரலாற்றுத் தரவுகளுடன் எடுத்துரைத்தார்.

வைக்கம் போராட்டத்தில் பெரியாரின் பங்கைத் திட்டமிட்டு மறைக்கும் சிலரின் முகத்திரையைக் கிழிக்க, வைக்கம் பயணம் நிச்சயம் உதவும்” எனப் பதிவிட்டுள்ளார். திராவிடப் பள்ளியின் இணை ஒருங்கிணைப்பாளர் வெற்றிச்செல்வன் இந்தப் பயணத்தை ஒருங்கிணைத்தார். வரலாற்றை வாசித்து அறிவதை விட, நேரில் சென்று பார்வையிட்டு அறிந்துகொள்வது, மாறுபட்ட, செறிவான புரிதலைத் தரவல்லது. அந்த அரிய முன்னெடுப்பை மேற்கொள்ளும் திராவிடப் பள்ளியின் முயற்சி பாராட்டத்தக்கது.

## ஃப்ளாஷ்பேக்



### முப்பெரும் விழாவில், முத்தமிழறிஞரிடம் பட்டம்!



எம்.ரமணி

1985-ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில், ‘திராவிட மறுமலர்ச்சி மாமன்றம்’ என்ற இரண்டாண்டு பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்ற 200-க்கும் மேற்பட்ட மாணவர்களுக்குப் பட்டயமும் பொற்கிழியும் வழங்கப்பட்டது. முதல் ஆண்டு மாணவியாக இருந்த நான், கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கரங்களில் இப்பட்டயத்தைப் பெறும் வாய்ப்பைப் பெற்றேன். உடன் பேராசிரியர், நாஞ்சிலார், ஆற்காட்டார், முரசொலி மாறன் ஆகியோர் மேடையில் வீற்றிருந்தனர்.

**– எம்.ரமணி,**
**மகளிர் அணித் துணை அமைப்பாளர்,**
**திருவள்ளூர் மத்திய மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### பகற் கனவு!

1957-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டங்களின் போது, தி.மு.கழகம் ‘இந்தி எதிர்ப்பு நாள்’ அனுசரித்த அக்டோபர் மாதத்தில், சில கூட்டங்களில் ராஜாஜியும் கலந்துகொண்டு உரையாற்றினார். ‘இந்தியைத் தேசிய மொழி ஆக்குவது முடியாத காரியம். பகற்கனவு, என்றென்றைக்கும் ஆங்கிலமே ஆட்சிமொழியாக நீடிக்க வேண்டும்’ என்று ராஜாஜி பேசினார்.

## எல்லோருக்கும் எல்லாம்

சு.விஜயபாஸ்கர்

**57**

**அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம், இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!**

# வகுப்புவாரிக் கொள்கையும் பெரியாரும்!


*1879*-இல் ஈரோடு வேங்கடப்ப நாயக்கருக்கும் சின்னத்தாயம்மாளுக்கும் மகனாகப் பிறந்த ஈ.வெ.இராமசாமி இயல்பிலேயே பகுத்தறிவுச் சிந்தனை மிக்கவராகவும், கேள்வி கேட்கும் திறன் கொண்டவராகவும் விளங்கினார். காந்திய சிந்தனையில் ஈர்க்கப்பட்ட ஈ.வெ.ரா, தான் செய்து கொண்டிருந்த வணிகத்தைத் துறந்து, 1919-இல் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியில் இணைந்தார். ஈரோடு நகரமன்றத் தலைவராக இருக்கையில், இந்தியர்கள் ஐரோப்பிய நிறுவனங்கள் உற்பத்தி செய்த துணிகளைப் பயன்படுத்துவதைக் கடுமையாக எதிர்த்து, ஊர்தோறும் இந்தியாவில் உற்பத்தியாகும் கதர் துணிகளை விற்பனை செய்தார். மக்கள் மதுப்பழக்கத்திலிருந்து மீள, கள்ளுக்கடை மறியல்களில் ஈடுபட்டார். தீண்டாமைக்கு எதிராகக் குரல் கொடுத்தார்.

மிக இளம் பிள்ளைப் பருவத்தில், தனது சிறிய பாட்டியின் கண்காணிப்பில் வளர்ந்து வந்த அவர், கட்டுங்கடாகாத முரட்டுப் பிள்ளையாகத் திரிந்தார். அக்காலத்தில் மக்கள் பலரும் அனுசரித்து வந்த சாதிப் பழக்க வழக்கங்களை மீறிவந்தார். சமூகத்தில் தாழ்ந்தோர் எனக் கருதப்பட்ட வாணியர், பணிக்கர், குறவர் முதலானோர் வீடுகளில் மற்றும் முஸ்லிம்கள் வீடுகளில் நீர் பருகுவதும் அவர்கள் அளிக்கும் உணவுப்பொருட்களை உண்பதும், அவரது பிள்ளைக்கால குறும்புகளாக இருந்தன. அத்தன்மை வளர வளர மனிதரிடையே உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்டிருப்பது தவறு எனவும், சுயநல வாழ்வுக்காரர்களின் சூழ்ச்சியினாலேயே செயற்கை முறையில் மனித இனம் பிரிந்து கிடக்கிறது என்றும் உணர ஆரம்பித்தார்.

பள்ளிப் படிப்பைக் கைவிட்டபின்னர், தந்தையாரின் மண்டிக்கடை வியாபாரத்தில் ஈடுபடுத்தப்பட்ட அவர், செல்வமும் வைதீகமும் ஒருங்கே நிறைந்த தமது வீட்டை நாடிவந்த சந்நியாசிகள், சாமியார்கள், பாகவதர்கள், பார்ப்பனர்கள், வித்துவான்கள் முதலான பக்திப் பிரச்சாரகர்களிடம் புராணங்கள், சாஸ்திரங்களில் இருக்கும் அறிவுக்குப் பொருந்தாத நம்பிக்கைகளையும் கதைகளையும் கிண்டல் செய்து, அவர்களோடு வாதிடுவதை அன்றாட வேலையாகக் கொண்டார். இவற்றின் விளைவாக 1891-ஆம் ஆண்டு முதலே கடவுள், சாதி, மதம் இவற்றில் நம்பிக்கையற்றவராக உருவானார். பிற்காலத்தில் அவற்றைக் கண்டித்துப் பேசியும் எழுதியும் வந்தார். தனது குழந்தைப் பருவம் பற்றி பிற்காலத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார் பெரியார்:

“எனக்குச் சிறுவயது முதற்கொண்டு சாதியோ, மதமோ கிடையாது. அதாவது நான் அனுஷ்டிப்பது கிடையாது. ஆனால், நிர்பந்தமுள்ள இடத்தில் போலியாகக் காட்டிக் கொண்டிருந்திருப்பேன். அதுபோலவே கடவுளைப் பற்றியும் மனத்தில் ஒரு நம்பிக்கையோ, பயமோ கொண்டிருந்ததும் இல்லை. நான் செய்யவேண்டுமென்று கருதிய எதையும் - கடவுள் கோபிப்பாரே என்றோ, தண்டிப்பாரோ என்றோ கருதி செய்யாமல் விட்டிருக்கமாட்டேன். கடவுள் மகிழ்ச்சியடைவாரென்று கருதியோ, சன்மானம் அளிப்பார் என்று கருதியோ எந்தக் காரியத்தையும் செய்திருக்கவும் மாட்டேன்.

எனது வாழ்நாளில் என்றைக்காவது சாதி, மதத்தையோ, கடவுளையோ உண்மையாக நம்பியிருந்தேனா என்று இன்னும் யோசிக்கிறேன். இதற்கு முன்பும் பலதடவை யோசித்திருக்கிறேன். எப்பொழுதிலிருந்து எனக்கு இவற்றில் நம்பிக்கை இல்லை என்றும் யோசித்துப் பார்த்திருக்கிறேன், கண்டுபிடிக்கவே முடியவில்லை.”




### காங்கிரசிலிருந்து...

இவ்வாறு சிறுவயதிலிருந்தே சாதி, மதப் பாகுபாடுகளில் நம்பிக்கையற்று இருந்த தந்தை பெரியார் குடும்பத்தில் பெண்களுக்கு எதிராக நடக்கும் பாரபட்சங்களில் கவனம் செலுத்தினார். குழந்தைத் திருமணம் செய்து குழந்தையாக இருக்கும்போதே, கணவனை இழந்து கைம்பெண்ணாகி, வாழ்நாள் முழுவதும் கைம்பெண்ணாகவே வாழ நேர்ந்த பல்லாயிரம் பெண்களின் துயரம் அவரை ஆட்கொண்டது. அவ்விதம் குழந்தைப் பிராயத்திலேயே கணவனை இழந்த தமது சகோதரி மகளுக்குக் குடும்பத்தின் எதிர்ப்பையும் மீறி, அவர் மறுமணம் செய்வித்தார்.

1907-ஆம் ஆண்டு முதல் 1919-ஆம் ஆண்டு வரை சுமார் 29 பதவிகளை ஏற்றிருந்த அவர் 1907 -ஆம் ஆண்டு முதல் காங்கிரஸ் இயக்கத்தில் ஆர்வங் கொண்டார். 1908-ஆம் ஆண்டு முதல் காங்கிரஸ் மாநாடுகளுக்குச் சென்று வந்தார். பல்வேறு மாநாடுகளை காங்கிரஸ் கட்சிக்காக நடத்தினார். டாக்டர் டி.எம்.நாயர் தலைமையிலான காங்கிரஸ் மாநாட்டை பெரியாரே முன்னின்று நடத்தினார். 1919-இல் இராஜாஜியின் வேண்டுகோளுக்கு இணங்க காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார்.

> ‘குடிஅரசு’ இதழைத் தொடங்கியிருந்தார் பெரியார். சுயமரியாதை இயக்கமும் தொடங்கியது. தமிழ்நாடும் தலைநிமிரத் தொடங்கியது.

1921-இல் ஈரோட்டில் கள்ளுக்கடைகளை மூட வலியுறுத்தி மறியல் செய்தபோது, கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். ஒத்துழையாமை இயக்கத்திலும் ஆர்வத்துடன் பணிசெய்தார். கேரளாவின் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் கோயில் இருக்கும் தெருக்களில், நடமாட தலித்துகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை எதிர்த்து, அங்கிருந்த சமூக ஆர்வலர்கள் போராட்டங்களில் கைது செய்யப்பட்டனர். இதையடுத்து அங்கிருந்த போராட்டத் தலைவர்கள், பெரியாருக்குக் கடிதம் எழுதி போராட்டத்தைத் தலைமையேற்று நடத்தும்படி வேண்டுகோள் விடுத்தனர்.

அப்போது சென்னை மாகாண காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்த பெரியார், காந்தியின் அறிவுரையையும் மீறி, திருவிதாங்கூர் விரைந்தார். திருவிதாங்கூர் மகாராஜா பெரியாரின் நண்பர் என்பதால், அவர் அரசு மரியாதையோடு வரவேற்கப்பட்டார். ஆனால், தாம் அரசை எதிர்த்துப் போராட வந்திருப்பதால், அரசு மரியாதையை ஏற்க முடியாது என்று மறுத்த பெரியார், தொடர்ந்து வைக்கத்தில் போராட்டம் நடத்திக் கைதானார். இதையடுத்து அவரது மனைவி நாகம்மை, பெண்களைத் திரட்டி போராட்டத்தைத் தொடர்ந்தார். போராட்டத்தின் வெற்றிக்குப் பிறகே அவர் ஊருக்குத் திரும்பினார். இதனால், ‘வைக்கம் வீரர்’ என்று அழைக்கப்பட்டார்.

### வகுப்புவாரிக் கோரிக்கை

இவ்வாறு தீவிர காங்கிரஸ்காரராக இருந்த தந்தை பெரியார் காங்கிரஸ் கட்சிக்குள்ளும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைச் செயல்படுத்த முனைந்தார். காங்கிரசில் அவர் உறுப்பினராகச் சேர்ந்தபோதே பார்ப்பனரல்லாத இயக்கத்தின் உயிர்நாடிக் கொள்கையான வகுப்புரிமையை, காங்கிரஸ் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும், 100-க்கு 50 இடங்கள் பாரப்பனரல்லாதாருக்கு ஒதுக்கப்படும் எனவும் பெரியாருக்கு உறுதியளிக்கப்பட்டது. 1920-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், வெற்றிபெற்ற நீதிக்கட்சி ஆட்சி, வகுப்புவாரி ஆணையைப் பிறப்பித்தது. காங்கிரஸ் கட்சிக்குள் இருந்த பெரியார், நீதிக்கட்சி கொணர்ந்த வகுப்புவாரி ஆணையை ஆதரித்தார்.

1919-ஆம் ஆண்டு முதல் 1925-ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் நடைபெற்ற 1919 (திருச்சி), 1920 (திருநெல்வேலி), 1921 (தஞ்சாவூர்), 1922 (திருப்பூர்), 1923 (மதுரை, திருச்சி), 1924 (திருவண்ணாமலை) காங்கிரஸ் மாநாடுகளில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் குறித்த தீர்மானங்களை நிறைவேற்ற முயன்றார் பெரியார். ஏதோ ஒரு காரணம் சொல்லி, பெரியார் நிறைவேற்ற விரும்பிய வகுப்புவாரித் தீர்மானங்களைக் காங்கிரசில் இருந்த பார்ப்பனர்கள் தோற்கடித்தனர்.

1925-ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் நடந்த மாநாட்டில், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தொடர்பான தீர்மானத்தை நிறைவேற்றும் தனது ஆறாவது முயற்சியை, பெரியார் செய்தார். அப்போது, சென்னை மாகாண காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த திரு.வி.கலியாணசுந்தரனார், பெரியார் கொண்டு வந்த வகுப்புவாரித் தீர்மானத்தை ஏற்க மறுத்தார். எனவே காங்கிரஸ் கட்சி மீது அதிருப்தி அடைந்த பெரியார், காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகினார். இதற்கு சில மாதங்களுக்கு முன்னர் ‘குடிஅரசு’ இதழைத் தொடங்கியிருந்தார் பெரியார். சுயமரியாதை இயக்கமும் தொடங்கியது. தமிழ்நாடும் தலைநிமிரத் தொடங்கியது.

...குரல் ஒலிக்கும்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131